[5 பிப்ரவரி 1982

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, அந்த வீடுகளை மீனவர்களுக்கு வாடகைக்கு விடுகிறீர்களா அல்லது இறுதியாக நிரந்தரமாக அவர்களே வைத்துக் கொள்ளும் திட்டத்தின் கீழ் கட்டப்படுகிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மீனவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் வசிக்கின்ற வீடுகளுக்கு வாடகை வசூலிக்கப்படுவது இல்லை. ஆனால் அவ்வீடுகள் அரசின் பெயரில்தான் இருக்கின்றன. அவர்கள் இலவசமாக குடியிருந்து வருகிறார்கள்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வாணியம்பாடி நகர மக்களுக்கு பட்டா வழங்குதல்.

*வினா எண் 43—திரு. ந. குலசேகர பாண்டியன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்காடு மாவட்டம் வாணியம்பாடி நகரத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பட்டா வழங்கப்பட்டு இன்னும் பட்டாதார்களுக்கு நிலம் வழங்கப்படாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) மற்றும் (ஆ): 1,364 பேர்கள் பாதிக்கப்பட்டார்கள். 1,223 நபர்களுக்கு பட்டா கொடுக்கப்பட்டுள்ளது.

திரு. இல. பலராமன் : பட்டா கொடுக்கப்பட்ட இடம் வசதியான இடம் அல்ல. அது மேட்டுப்பாங்கான மலைப் பிரதேசமாகையால் அந்த மக்கள் நகர்ப்புறத்திற்கு அருகாமையில் உள்ள நிலத்தைக் கோரி இருப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படிப்பட்ட நிலத்தைக் கொடுக்க வேண்டும் என்று பொது மக்களும் மற்றும் அரசியல்வாதிகளும் கோரி இருப்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அதுகுறித்து அரசு என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அந்த இடத்தை வருவாய்த்துறை அமைச்சர் நேராகச் சென்று பார்த்து அவர்களுக்கு எந்த இடத்தைக் கொடுப்பது என்று பார்த்து உள்ளூரில் கொடுக்கலாம் என்றால் அங்கே நிலம் இல்லாத காரணத்தாலும், மேலும், ஆற்றில் வெள்ளம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1982 பிப்ரவரி 5]

வந்தால் பாதிக்கப்படும் என்ற காரணத்தாலும் மலைச் சரிவில், நானே நேராகப் பார்த்து அவர்களைக் கூட்டிவைத்து அவர்களும் ஏற்றுக்கொண்டு ஆர்ஜிதம் செய்து கொடுக்கப்பட்டது.

திரு. ஏ. சி. சண்முகம் : எஞ்சியுள்ள நபர்களுக்கு எப்போது பட்டா வழங்கப்படும்? மேட்டுப்பாங்கான இடங்களில் குடிசைகள் போட்டுக் கொள்ள இடம் கொடுத்திருப்பதால் குடிநீர்ப் பிரச்சினை அவர்களுக்கு அங்கே அதிகமாக இருக்கிறது, அது தீர்க்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பட்டா கொடுக்கப்பட்ட இடங்களில் வீடுகள் அவர்களே கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அங்கு இரண்டு பிரச்சினைகள் உள்ளன, ஒன்று குடிநீர்ப் பிரச்சினை, இரண்டாவது லைட். இரண்டிற்கும் வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன, செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. சுந்தரம் : பட்டா கொடுக்கப்பட்ட பெரும்பகுதி மக்கள் அங்கே வசதி இல்லாத காரணத்தால் குடியேறவில்லை, வேறு இடம் கேட்டிருக்கிறார்கள். அப்படி வேறு இடங்கள் கொடுக்க அரசு முயற்சி எடுத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அந்த இடங்களைப்போய்ப் பார்த்து, வேறு இடங்கள் அந்த ஊரில் சௌகரியமாக இல்லை என்று தெரிய வருகிறது. வேறு நல்ல இடம் என்று தெரிந்தால் அரசாங்கம் கொடுக்க தயாராக இருக்கும்.

பைங்கிணர் கிராமத்தில் குடியிருப்பவர்களுக்குப் பட்டா வழங்கும் திட்டம்

*வினா எண் 44—திரு. சோ. அழகர்சாமி, திரு. என். ஏ. பூங்காவனம், திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் செய்யாறு தாலுகா பைங்கிணர் கிராமத்தில் சர்வே நெம்பர் 101/4-இல் பல ஆண்டு காலமாகக் குடியிருப்பவர்களை வெளியேற்றிவிட்டு வேறு நபர்களுக்கு அந்த இடத்தைப் பட்டா போட்டுக் கொடுக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளார்கள் என்பது உண்மையா ?

(ஆ) ஆமெனில், அதைத்தடுத்து அங்கு குடியிருப்பவர்களுக்கு அந்த இடங்களை சொந்தமாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?